# உள்ளடக்கம்


1. Healthpoints ____ 2
2. Healthpoints - ஆண்டுக்கான அதிகபட்ச வரம்பு ____ 6
3. HPB eVouchers ____ 7
4. கடைத்தொகுதி Voucherகள் ____ 11
5. வணிகப் பெயர் eVouchers ____ 12
6. மெடிஷீல்ட் லைஃப் காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிகள் ____ 14
7. SimplyGo eVouchers ____ 16
8. பங்குபெறும் பங்காளி வணிகர்கள் ____ 20
9. எங்களைத் தொடர்பு கொள்ளவும் ____ 21


Updated on 22 Sep 2025


# 1. Healthpoints

1. **நான் எப்படி அதிக Healthpoints பெறுவது?**
   HPB மற்றும் அதன் பங்காளிகளின் குறிப்பிட்ட திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் உங்களுக்கு Healthpoints வழங்கப்படும்.

2. **எனது Healthpoints புள்ளிகளுடன் நான் எதையெல்லாம் மீட்டெடுக்கலாம்?**
   உங்களது Healthpoints புள்ளிகளுடன் பின்வரும் வகையான வெகுமதிகளை நீங்கள் மீட்டெடுக்கலாம்:
   - HPB மற்றும் வணிகப் பெயர் eVouchers
   - அறப்பணி நன்கொடைகள்
   - SimplyGo eVouchers (முன்பு டிரான்சிட்லிங்க் eVouchers என்றறியப்பட்டது)

3. **நான் வெற்றிகரமாக மீட்டெடுத்துவிட்டேனா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?**
   நீங்கள் வெற்றிகரமாக மீட்டெடுத்தவுடன், அதனை உறுதிப்படுத்தும் தகவல் காட்டப்படும். மீட்டெடுத்த பரிவர்த்தனையின் விவரங்களை "Rewards History" பகுதியின்கீழ் காணலாம்.

4. **எனது Healthpoints எப்போது காலாவதியாகும்?**
ஒவ்வொரு Healthpoint புள்ளியும் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும். உங்களது சுருக்கமான Healthpoints விவரங்களை (காலாவதி தேதி உட்பட) வெகுமதிகள் பகுதியில் "Wallet" என்பதன்கீழ் காணலாம். காலாவதி தேதி பற்றிய தேவையான விவரங்களுக்கு, "Wallet" சுருக்கமான விவரப் பக்கத்தைப் பார்க்கலாம். காலாவதியாகிவிட்ட Healthpoints தானாகவே பறிமுதலாகி, ரத்து செய்யப்பட்டு, செல்லாதவையாகிவிடும். செல்லுபடியாகும் காலத்தை நீட்டிக்க, பரிமாற்றம் செய்ய, மாற்றித்தர அல்லது திரும்பித்தர செய்யப்படும் எந்தக் கோரிக்கையும் ஏற்கப்படாது.




Healthpoints புள்ளிகளுடன் eVouchersகளை மீட்டெடுப்பது எப்படி:
**படிநிலை 1:** உங்களது Healthy 365 செயலியைத் திறந்து, "Rewards" மீது தட்டவும்
**படிநிலை 2:** "Redeem now" மீது தட்டவும்
**படிநிலை 3:** நீங்கள் விரும்பும் மின்பற்றுச்சீட்டைப் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கவும்
**படிநிலை 4:** "Redeem" மீது தட்டிவிட்டு, திரையில் காட்டப்படும் அறிவுறுத்தல்களின்படி செய்யவும்
**படிநிலை 5:** மீட்டெடுக்கப்பட்ட மின்பற்றுச்சீட்டை "My Rewards" பக்கத்தில் காணலாம்
மேல்விவரம் அறிய, https://go.gov.sg/stepbystep-guide-for-rewards-tamil அழுத்தி வெகுமதிகள் வழிகாட்டியைப் பார்க்கவும்.

5. **"My Healthpoints" எதைக் குறிக்கிறது?**
H365 செயலியில், "My Healthpoints" என்பது உங்களுக்கு வழங்கப்பட்ட ஒட்டுமொத்த Healthpoints-ஐக் குறிக்கிறது. உங்கள் Healthpoints காலாவதியாகும் முன் H365 வெகுமதிப் பட்டியலில் உள்ள ஏதேனும் வெகுமதிப் பொருட்களை உங்கள் Healthpoints-ஐ உபயோகித்து மீட்டெடுத்துக் கொள்ளலாம்.

6. **எனது Healthpoints புள்ளிகளை வேறொருவருக்குக் கொடுக்கலாமா, அல்லது அவற்றுக்குப் பதிலாக ரொக்கமோ வரவுத்தொகையோ பெறலாமா?**
Healthpoints புள்ளிகளை மூன்றாம் தரப்பினர் யாருக்கும் கொடுக்கவும் முடியாது, அவற்றுக்குப் பதிலாக ரொக்கமாகவோ வரவுத்தொகையாகவோ பெறவும் முடியாது.

7. **நான் எனது Healthpoints புள்ளிகளுடன் ஒரு வெகுமதியைத் தவறுதலாக மீட்டெடுத்துவிட்டேன். நான் வெகுமதியை மாற்ற கோரிக்கை செய்ய முடியுமா?**
இல்லை, நீங்கள் வெகுமதியை மாற்ற கோரிக்கை செய்ய முடியாது. ஒரு வெகுமதி மீட்டெடுக்கப்பட்டவுடன், அதைத் திருப்பிக்கொடுத்து அல்லது அதற்குப் பதிலாக ரொக்கம், Healthpoints, அல்லது வேறு வெகுமதி எதுவும் பெற முடியாது.

- **எனது Healthpoints புள்ளிகளை ஏன் என்னால் மீட்டெடுக்க முடியவில்லை? எனக்கு "ஏதோ பிழை ஏற்பட்டிருக்கிறது" என்ற இந்தத் தகவல் கிடைத்தது:**
  நீங்கள் Healthpoints-ஐ மீட்டெடுக்கும்போது "ஏதோ பிழை ஏற்பட்டிருக்கிறது" என்ற தகவல் தோன்றினால் தொழில்நுட்பப் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கலாம். தயவுசெய்து பிற்பாடு மீண்டும் முயற்சி செய்து பார்க்கவும் அல்லது உதவிக்கு சுகாதார மேம்பாட்டு வாரிய வாடிக்கையாளர் சேவை முகவர்களை HPB_Mailbox@hpb.gov.sg மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**உங்களிடம் உள்ள Healthpoints புள்ளிகள், காலாவதி தேதிகள் ஆகியவற்றைப் பார்வையிடவும், நீங்கள் பாடுபட்டுச் சம்பாதித்த Healthpoints புள்ளிகளுக்கு Healthy 365 செயலியில் அருமையான வெகுமதிகளை மீட்டெடுக்கவும் https://go.gov.sg/view-healthpoints-and-transaction-history கற்றுக் கொள்ளவும்.**

## 2. Healthpoints - ஆண்டுக்கான அதிகபட்ச வரம்பு

1. **ஒரு வருடத்தில் எனக்கு வழங்கப்படும் Healthpoints-ன் அதிகபட்ச மதிப்பு என்ன?**
   a. Lifestyle வகை நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் மொத்த Healthpoints, ஒரு காலண்டர் ஆண்டிற்கான அதிகபட்ச வரம்பான ("வாழ்க்கைமுறை வரம்பு") 28,500 Healthpoints-க்கு உட்பட்டது.
   b. Partners Programme வகை நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் மொத்த Healthpoints, ஒரு காலண்டர் ஆண்டிற்கான அதிகபட்ச வரம்பான ("பார்ட்னர்ஸ் வரம்பு") 12,000 Healthpoints-க்கு உட்பட்டது.


2. **Lifestyle வகையிலும் Partners Programme வகையிலும் என்னென்ன நடவடிக்கைகள் உள்ளன?**
   a. Lifestyle வகையில், இங்கு பட்டியலிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் ("Lifestyle நடவடிக்கைகள்") முழு நிறைவானதாக இல்லாமல் இருக்கலாம். மேலும், ஒவ்வொரு நடவடிக்கையும், திட்ட விதிமுறைகள் மற்றும் அதன் குறிப்பிட்ட அமைப்புக்கு உட்பட்டு Healthpoints-ஐ வழங்கலாம்:
      i) நடை
      ii) மிதமானது முதல் தீவிரமான உடற்பயிற்சி (MVPA)
      iii) தூக்கம்
      iv) தகுதிபெறும் ஆரோக்கியத் தேர்வான பொருளை வாங்குதல்
      v) உணவுப் பதிவு உள்ளீடு
      vi) சுகாதார ஈடுபாட்டு நடவடிக்கைகள் (எ.கா., வினாடி வினாக்கள் மற்றும் உடற்பயிற்சிகள்)
      vii) ஆய்வுகள்
   b. Partners Programme திட்ட வகையில், நடவடிக்கைகள் தொடங்குவதற்குத் தயாரானதும், நடவடிக்கைகளின் விவரங்கள் ("Partners Activities"-ல்) கிடைக்கும்.
   c. சுகாதார மேம்பாட்டு வாரியம் (HPB) அதன் முழுமையான விருப்பத்தின் பேரில், முன்னறிவிப்பின்றி அவ்வப்போது இந்தப் பட்டியலை மாற்றலாம் மற்றும்/அல்லது திருத்தலாம்.

3. **நான் Lifestyle வரம்பை எட்டும்போது என்ன நடக்கும்?**
அந்தக் குறிப்பிட்ட காலண்டர் ஆண்டிற்கான அனைத்து Lifestyle நடவடிக்கைகளுக்கும் உங்களுக்குக் கூடுதல் Healthpoints வழங்கப்படாது. உதாரணமாக, 2 டிசம்பர் 2024 அன்று நீங்கள் Lifestyle வரம்பை எட்டியிருந்தால், மீதமுள்ள காலண்டர் ஆண்டுக்கான நடை மைல்கற்களை முடிப்பதற்கான கூடுதல் Healthpoints எதுவும் உங்கள் வாலட்டில் சேர்க்கப்படாது.

   Lifestyle அல்லாத நடவடிக்கைகளுக்கான Healthpoints-ஐ நீங்கள் தொடர்ந்து பெறலாம் (எ.கா. Healthier SG (HSG) சுகாதாரத் திட்டக் கலந்தாய்வை முடித்ததிலிருந்து பெறும் 3,000 Healthpoints).

   புதிய காலண்டர் ஆண்டின் தொடக்கத்தில் (அதாவது, 1 ஜனவரி, 00:00 மணி) Lifestyle நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் Healthpoints மீட்டமைக்கப்படும்.

4. **Lifestyle வரம்பு காரணமாக எனக்கு Healthpoints வழங்கப்படவில்லை என்பதை நான் எப்படி அறிந்துகொள்வது?**
நீங்கள் Lifestyle வரம்பை எட்டிவிட்டீர்கள் என்று செயலியில் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். கூடுதலாக, Lifestyle வரம்புக்கு அப்பால் முடிக்கப்பட்ட அனைத்து Lifestyle நடவடிக்கைகளும் உங்கள் Healthy 365 ‘பரிவர்த்தனைகளில்’ தொடர்ந்து பிரதிபலிக்கப்படுவதோடு, அவை நட்சத்திரச் சின்னத்தாலும் குறிக்கப்படும்.



# 3. HPB eVouchers

1. **HPB eVouchers என்பவை என்ன?**
HPB eVouchers என்பது சிங்கப்பூர் நாணயத்தில் வெளியிடப்படும் மின்னியல் Voucherகளாகும். இவை $5 மற்றும் $10 மதிப்புகளில் கிடைக்கும். இவற்றை முறையே 750 மற்றும் 1,500 Healthpoints உடன் மீட்டெடுக்கலாம்.

2. **நான் எப்படி எனது HPB eVouchersகளைப் பயன்படுத்துவது?**
பங்குபெறும் வணிகர்களின் கடைகளில் ஒரே பரிவர்த்தனைக்குப் பற்பல HPB eVouchersகளைப் பயன்படுத்தலாம். மின்பற்றுச்சீட்டின் பயன்படுத்தப்படாத தொகை இழக்கப்படும். மின்பற்றுச்சீட்டின் திரைக்காட்சிப் படங்கள் ஏற்கப்படமாட்டாது. மேல்விவரம் அறிய, HealthHub இணையத்தளத்தின் “Programmes” பகுதியின்கீழ் இருக்கும் வெகுமதிகள் பக்கத்தை நீங்கள் பார்க்கலாம்.

3. **எனது HPB eVouchersகளை எங்கே பயன்படுத்துவது?**
பங்குபெறும் வணிகர்களின் பட்டியலை Healthy 365 செயலியில் உள்ள HPB eVouchers விவரங்களின்கீழ் காணலாம்.

4. **எனது HPB eVouchers காலாவதியாகுமா?**
ஆமாம், HPB eVouchers ஒவ்வொரு மின்பற்றுச்சீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதித் தேதியில் இரவு 11.59 மணிக்கு காலாவதியாகிவிடும்.

5. **எனது HPB eVouchers காலாவதியாகிவிட்டது. நான் அதை இன்னமும் பயன்படுத்த முடியுமா அல்லது அதை மாற்றித் தருமாறு கோரிக்கை செய்ய முடியுமா?**
இல்லை, உங்களது HPB eVouchers காலாவதியான பிறகு அதைப் பயன்படுத்தவோ அல்லது அதை மாற்றித் தருமாறு கோரிக்கை செய்யவோ முடியாது.

6. **நான் வாங்கும் பொருளின் விலை எனது HPB மின்-பற்றுச்சீட்டின் மதிப்பைவிட அதிகமாக இருந்தால் என்னவாகும்?**
   மின்பற்றுச்சீட்டின் மதிப்பு, நீங்கள் வாங்கும் பொருட்களின் அல்லது சேவைகளின் முழு விலைக்கும் போதாவிட்டால், மீதித் தொகையை வணிகரால் ஏற்கப்படும் கட்டணமுறைகளைப் பயன்படுத்தி நீங்கள் செலுத்தவேண்டும்.

7. **நான் தவறுதலாக ஒரு HPB மின்-பற்றுச்சீட்டைச் செயல்படுத்திவிட்டேன். நான் பணத்தைத் திரும்பப் பெற முடியுமா?**
   இல்லை, HPB eVouchersகளைத் தவறுதலாக அல்லது வேறுவிதமாகச் செயல்படுத்திய பிறகு, பணத்தைத் திரும்பப் பெற முடியாது. காசாளர் உங்களைக் கவனிக்கும்போதும் நீங்கள் பணம் செலுத்தத் தயாராக இருக்கும்போதும் மட்டுமே உங்களது மின்-பற்றுச்சீட்டை நீங்கள் காட்டவேண்டும்.


8. **நான் எனது மின்-பற்றுச்சீட்டைக் காசாளரிடம் காட்டிய பிறகு பரிவர்த்தனையை ரத்து செய்தால், மின்-பற்றுச்சீட்டின் பணமதிப்பைத் திரும்பப் பெற / பரிமாற்றம் செய்ய / வேறொருவருக்கு மாற்ற முடியுமா?**
   இல்லை, நீங்கள் மின்-பற்றுச்சீட்டைக் காசாளரிடம் காட்டிய பிறகு பணமதிப்பைத் திரும்பப் பெற முடியாது.

9. **எனது HPB eVouchersகளை ரொக்கப் பணத்திற்குப் பரிமாற்றம் செய்ய முடியுமா?**
   இல்லை, HPB eVouchersகளை ரொக்கப் பணத்திற்கோ அல்லது வேறு வெகுமதிக்கோ பரிமாற்றம் செய்ய முடியாது.


10. **எனது HPB eVouchersகளை வேறொரு கணக்குக்கு மாற்ற முடியுமா?**
    இல்லை, HPB eVouchersகளை வேறொரு கணக்குக்கு மாற்ற முடியாது.

11. **HPB eVouchersகளின் பயன்பாட்டுக்கு ஏதாவது கட்டுப்பாடுகள் இருக்கின்றனவா?**
    ஆமாம், HPB eVouchersகளின் பயன்பாட்டுக்குப் பின்வரும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன:
    - HPB eVouchersகளைப் பயன்படுத்தி மற்ற சில்லறைக் கடைகளின் Voucherகள், அதிர்ஷ்டக்குலுக்குச் சீட்டுகள், சிகரெட், மதுபானங்கள், முன்கட்டண அட்டைகள் (டேட்டா திட்டங்கள் தவிர) வாங்க முடியாது.
    - HPB eVouchersகளின் பயன்பாடு, பங்குபெறும் ஒவ்வொரு வணிகரின் விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
    - HPB eVouchers அங்கீகரிக்கப்படாத தரப்புகளிடமிருந்து பெறப்பட்டிருந்தால் ஏற்கப்படாது. எந்தச் சமயத்திலும், முன்னறிவிப்பின்றி அல்லது உங்களிடம் எந்தப் பொறுப்புமின்றி, உங்களுக்கு வழங்கப்படும் அல்லது நீங்கள் மீட்டெடுக்கும் HPB eVouchersகளில் மாற்றங்கள் செய்யும் உரிமை சுகாதார மேம்பாட்டு வாரியத்திற்கு உண்டு.
    - முழு விவரங்களுக்கு, தயவுசெய்து HPB வெகுமதிகள் திட்டம் விதிமுறை 7: விதிமுறைகளும் நிபந்தனைகளும் பகுதியைப் பார்க்கவும் https://go.gov.sg/rewards-terms-and-conditions.

12 **நான் மீட்டெடுத்த பரிவர்த்தனைக்குப் பிறகு எனது HPB eVouchersகளை எங்கே பார்க்கலாம்?**
நீங்கள் வெற்றிகரமாக மீட்டெடுத்த பிறகு, HPB eVouchers உங்கள் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். 'My Rewards' பகுதியின்கீழ் அவற்றைக் காணலாம்.





13 **HPB eVouchersகளின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் எங்கே பார்ப்பது?**
மின்பற்றுச்சீட்டின் விதிமுறைகள், நிபந்தனைகள் உள்ளிட்ட விவரங்களைப் பார்வையிட, HPB மின்-பற்றுச்சீட்டின்மீது தட்டவும்.




14 **HPB eVouchersகளைப் பங்குபெறும் வணிகக் கடைகளில் எப்படிப் பயன்படுத்துவது?**
HPB eVouchersகளின் பயன்பாடு குறித்து “Rewards” பக்கத்தின் முடிவில் காணப்படும் படிப்படியான வழிகாட்டியைப் பார்க்கவும்.

15 **இணைய வணிகரின் செயலியில் / இணையத்தளத்தில் HPB மின்பற்றுச்சீட்டை எப்படிப் பயன்படுத்துவது?**
HPB மின்-பற்றுச்சீட்டைப் பயன்படுத்துவதற்காக அழுத்தியவுடன் “Online” தெரிவைத் தேர்ந்தெடுக்கவும். திரையில் காட்டப்படும் Voucher குறியீட்டை நகலெடுத்து, வணிகரின் செயலியில் / இணையத்தளத்தில் ஒட்டி, பற்றுச்சீட்டைப் பயன்படுத்தவும்.




HPB eVouchers 30க்கும் மேற்பட்ட வணிகக் கடைகளில் ஏற்கப்படுகின்றன. Healthpoints புள்ளிகளுடன் Healthy 365 செயலியில் HPB eVouchers மீட்டெடுக்க https://go.gov.sg/redeem-hpb-evouchers-using-healthpoints கற்றுக் கொள்ளவும்.

# 4. கடைத்தொகுதி Voucherகள்

1. **HPB eVouchersகளை அச்சிடப்பட்ட கடைத்தொகுதி Voucherகளாக மாற்றிப் பெறுவது எப்படி?**
   பங்குபெறும் கடைத்தொகுதிகளில் HPB eVouchers ஏற்கப்படும். இந்தப் Voucherகளை அச்சிடப்பட்ட கடைத்தொகுதி Voucherகளாக மாற்றிப் பெற, கடைத்தொகுதிகளின் வாடிக்கையாளர் சேவை முகப்புகளை அல்லது வரவேற்புப் பகுதியை அணுகவும். கடைத்தொகுதிகளின் பட்டியலுக்கு, Healthy 365 செயலியில் உள்ள HPB eVouchers விவரங்களின்கீழ் காணப்படும் பட்டியலைப் பார்க்கவும்.

2. **கடைத்தொகுதி Voucherகளை என்னென்ன பணமதிப்புகளில் மீட்டெடுக்கலாம்?**
   கடைத்தொகுதி Voucherகளை $5 மற்றும் $10 மதிப்புள்ள HPB eVouchersகளைப் பயன்படுத்தி மட்டுமே மீட்டெடுக்கலாம். பணமதிப்பிலுள்ள வித்தியாசத்தை ஈடுசெய்ய ரொக்கப்பணம் பயன்படுத்த அனுமதிக்கப்படலாம். இது, அந்தந்தக் கடைத்தொகுதிகளின் விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

3. **எனது கடைத்தொகுதி eVouchersகளை எங்கே பயன்படுத்துவது?**
   விவரங்களுக்கு அந்தந்தக் கடைத்தொகுதிகளின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பார்க்கவும்.

# 5. வணிகப் பெயர் eVouchers

1. **வணிகப் பெயர் eVouchersகளை என்னென்ன பணமதிப்புகளில் மீட்டெடுக்கலாம்?**
   வணிகப் பெயர் eVouchers $5 மற்றும் $10 பணமதிப்புகளில் கிடைக்கும்.

2. **நான் மீட்டெடுத்த பரிவர்த்தனைக்குப் பிறகு எனது வணிகப் பெயர் eVouchersகளை எங்கே பார்க்கலாம்?**
   ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பிறகு வணிகப் பெயர் eVouchers உங்கள் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். 'My Rewards' பகுதியின்கீழ் அவற்றைக் காணலாம்.

3. **வணிகப் பெயர் மின்-பற்றுச்சீட்டை மீட்டெடுத்த பிறகு, அதற்குப் பதிலாக HPB eVouchers அல்லது வேறொரு வணிகப் பெயர் eVouchers பெற முடியுமா?**
   இல்லை, நீங்கள் பற்றுச்சீட்டை மாற்ற முடியாது.

4. **நான் வாங்கும் பொருளின் விலை எனது வணிகப் பெயர் மின்பற்றுச்சீட்டின் மதிப்பைவிட அதிகமாக இருந்தால் என்னவாகும்?**
   ஒரு பரிவர்த்தனையில் பயன்படுத்தப்படும் eVouchersகளின் மதிப்பு, நீங்கள் வாங்கும் பொருட்களின் அல்லது சேவைகளின் முழு விலைக்கும் போதாவிட்டால், மீதித் தொகையை நீங்கள் வணிகருக்குக் கொடுக்கவேண்டும்.

5. **வணிகப் பெயர் eVouchers காலாவதியாகுமா?**
   ஆமாம், வணிகப் பெயர் eVouchers ஒவ்வொரு மின்பற்றுச்சீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதி தேதியில் இரவு 11.59 மணிக்குக் காலாவதியாகிவிடும்.

6. **எனது வணிகப் பெயர் eVouchers காலாவதியாகிவிட்டது. நான் அதை இன்னமும் பயன்படுத்த முடியுமா அல்லது அதை மாற்றித் தருமாறு கோரிக்கை செய்ய முடியுமா?**
   இல்லை, உங்களது eVouchers காலாவதியான பிறகு அதைப் பயன்படுத்தவோ அல்லது அதை மாற்றித் தருமாறு கோரிக்கை செய்யவோ முடியாது.


7. **நான் எனது வணிகப் பெயர் மின்பற்றுச்சீட்டைக் காசாளரிடம் காட்டிய பிறகு பரிவர்த்தனையை ரத்து செய்தால், மின்-பற்றுச்சீட்டின் பணமதிப்பைத் திரும்பப் பெற / பரிமாற்றம் செய்ய / வேறொருவருக்கு மாற்ற முடியுமா?**
   இல்லை, வணிகப் பெயர் மின்-பற்றுச்சீட்டைக் காசாளரிடம் காட்டிய பிறகு பணமதிப்பைத் திரும்பப் பெறவோ, பரிமாற்றம் செய்யவோ, அல்லது வேறொருவருக்கு மாற்றவோ முடியாது.

8. **நான் தவறுதலாக ஒரு வணிகப் பெயர் மின்-பற்றுச்சீட்டைச் செயல்படுத்திவிட்டேன். நான் பணத்தைத் திரும்பப் பெற முடியுமா?**
   இல்லை, வணிகப் பெயர் eVouchersகளைத் தவறுதலாகச் செயல்படுத்திய பிறகு பணத்தைத் திரும்பப் பெற முடியாது. கடை ஊழியர் உங்களைக் கவனிக்கும்போது மட்டுமே உங்களது மின்பற்றுச்சீட்டை நீங்கள் காட்டவேண்டும்.

9. **எனது வணிகப் பெயர் eVouchersகளை நான் வேறொரு கணக்குக்கு மாற்ற முடியுமா அல்லது அதற்குப் பதிலாக ரொக்கப்பணம் பெற முடியுமா?**
   இல்லை, வணிகப் பெயர் eVouchersகளை வேறொருவருக்கு மாற்ற முடியாது. அவற்றை (முழுமையாக அல்லது ஒருபகுதியை) ரொக்கப்பணத்திற்குப் பரிமாற்றம் செய்ய முடியாது.

10. **எனது வணிகப் பெயர் eVouchersகளின் பயன்பாட்டுக்கு ஏதாவது கட்டுப்பாடுகள் இருக்கின்றனவா?**
    உங்களது Healthy 365 கணக்கில் உள்ள மின்பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களையும், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் பார்க்கவும்.

11. **இணைய வணிகர்களின் சலுகைக் குறியீடு எவ்வாறு செயல்படுகிறது?**
    மின்-பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிமுறையைப் பார்க்கவும். மின்-பற்றுச்சீட்டைப் பயன்படுத்த அதனை அழுத்தியதும், பற்றுச்சீட்டின் குறியீட்டை நகலெடுத்து, அதே நாளில் வணிகரின் இணையத்தளத்தில் (எ.கா. KLOOK) மீட்டெடுக்கவும். சலுகைக் குறியீட்டை அதே நாளில் பயன்படுத்தாததால், வணிகரின் செயலி / இணையத்தளம் அதை நிராகரித்தால், பணம் எதுவும் திருப்பித் தரப்படாது.



# 6. மெடிஷீல்ட் லைஃப் காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிகள்

1. **எனது Healthpoints-களை MSHL காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிக்குப் பயன்படுத்தும்போது, 'அரசு உங்கள் மெடிஷீல்ட் லைஃப் (MSHL) காப்பீட்டுக் கட்டணங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது' எனும் பிழைச் செய்தி ஏன் வந்தது?**
   - வார்டு கட்டண நிலைத்தொகை (FAW) மற்றும் வார்டு இணைக்கட்டண திட்டம் (CPW) ஆகிய மருத்துவத் திட்டங்களில் உள்ள அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கான MSHL காப்பீட்டுக் கட்டணம் அரசால் முழுமையாகக் கட்டப்படுகிறது. கட்டணம் செலுத்த கூடுதல் ஆதரவு (APS) பெறத் தகுதியான உறுப்பினர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் MSHL காப்பீட்டுக் கட்டணம் அரசால் முழுமையாக ஈடுசெய்யப்படும்.
   - இந்த உறுப்பினர்களுக்குக் கட்டணம் தேவைப்படாத காரணத்தால், MSHL கட்டணத் தள்ளுபடிகளுக்கான Healthpoints-களைத் தள்ளுபடிகளுக்குப் பயன்படுத்துவது பொருந்தாது.
   - உங்களுடைய Healthpoints-களை, மளிகைப் பற்றுச்சீட்டுகள், போக்குவரத்துச் செலவுகள் அல்லது வாழ்க்கைமுறைத் தேவைகள் போன்ற மற்ற சலுகைகளுக்காக அதிகம் பயன்படுத்தலாம். கூடுதல் தகவல்களைச் சுகாதார மேம்பாட்டுக் கழக 'சலுகைகள் திட்டம்: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்' (HPB Rewards Programme FAQ) பகுதியில் காணலாம்

2. **நான் MSHL காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிக்காக Healthpoints-களைப் பயன்படுத்த முயன்றபோது, 'நீங்கள் தள்ளுபடிக்கு தகுதியற்றவர்' எனும் பிழைச் செய்தி ஏன் வந்தது?**

   - MSHL இன் கீழ் வரும் சிங்கப்பூர்க் குடிமக்கள் (SC) அல்லது நிரந்தர குடியிருப்பாளர்கள் (PR) மட்டுமே MSHL கட்டணத் தள்ளுபடிகளுக்கு Healthpoints-களை பயன்படுத்த முடியும்.

   பின்குறிப்பு: நீங்கள் ஒரு சிங்கப்பூர்க் குடிமகன் (SC) அல்லது நிரந்தர குடியிருப்பாளராக (PR) இருந்தாலும், பின்வரும் காரணங்களுக்காக MSHL கட்டணத் தள்ளுபடிகளைப் பெறத் தற்காலிகமாகத் தகுதியற்றவராக இருக்கலாம் (இவை சில உதாரணங்கள் மட்டுமே, முழுமையான பட்டியல் அல்ல):
   - உங்கள் MSHL கட்டண வசூலிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க விண்ணப்பித்திருந்தீர்கள், மேலும் அந்த விண்ணப்பம் மத்திய சேமநிதி (CPF) வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கலாம்; அல்லது
   - நீங்கள் புதிய சிங்கப்பூர்க் குடிமகனாக (SC) அல்லது நிரந்தர குடியிருப்பாளராக (PR) ஆகி, உங்கள் MSHL காப்பீடு இன்னும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்றால். மேலும் விவரங்களுக்கு, cpf.gov.sg/MydashboardsFAQ (Healthcare) இணையத்தளத்தைப் பார்வையிட்டு உங்கள் MSHL காப்பீட்டின் கவரேஜ் நிலையைச் சரிபார்க்கவும்.

5. **நான் தவறுதலாக MSHL காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிகளை மீட்டுவிட்டேன். இதை ரத்து செய்ய முடியுமா அல்லது பணத்தைத் திரும்பப் பெற முடியுமா?**

   MSHL காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிகள் திரும்பப் பெறப்பட முடியாதவை. அவற்றைப் பணமாகவோ, Healthpointsகளாகவோ அல்லது வேறு எந்தச் சலுகையாகவோ மாற்றப்பட முடியாதவை.

5. **MSHL முன்னோடித் திட்டத்திற்குத் தகுதி பெறும் தனிநபர்கள், தங்களது தகுதிக் காலகட்டத்திற்குள் Healthy 365 செயலியில் உள்ள தங்களது Healthpoints-களுடன் சந்தா தள்ளுபடிகள் மற்றும் சலுகைப் பற்றுச்சீட்டுகளின் கலவையை மீட்டுக்கொள்ள முடியுமா?**

   முன்னோடித் திட்டத்திற்குத் தகுதி பெறும் தனிநபர்கள், வழங்கப்படும் சுகாதாரப் புள்ளிகளைக் கொண்டு சந்தா தள்ளுபடிகள், சலுகைப் பற்றுச்சீட்டுகள் ஆகியவற்றை மீட்டெடுக்க முடியும். வழங்கப்பட்ட மொத்த Healthpoints-களின் எண்ணிக்கையில் உச்சவரம்பு வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தனிநபர்கள் தங்கள் மாற்று விகிதங்களின்படி காப்பீட்டுக் கட்டணத் தள்ளுபடிகளையும் சலுகைகளையும் மீட்டெடுக்க முடியும்.

- **முன்னோடித் திட்டம் நடப்பில் இருக்கும்போது, 40 வயதிற்குட்பட்ட தனிநபர்கள் தற்போதுள்ள Healthy365 சலுகை முறையின்கீழ் வெகுமதிகளை மீட்டுக்கொள்ள முடியுமா?**


  முன்னோடித் திட்டத்திற்குத் தகுதி பெறாத 40 வயதுக்குட்பட்ட தனிநபர்கள் Healthy365 செயலியில் ஆரோக்கியமான வாழ்க்கை முறைத் திட்டங்கள் மற்றும் சவால்களில் பங்கேற்பதன் மூலம், 150 Healthpoints-களை $1 என்ற வழக்கமான மாற்று விகிதத்தில் தொடர்ந்து மற்ற சலுகைகளை மீட்டெடுக்க முடியும்.

# 7. SimplyGo eVouchers

1. **நான் SimplyGo eVouchersகளை மீட்டெடுக்கத் தகுதி பெறுகிறேனா?**
செல்லுபடியாகும் பொதுப் போக்குவரத்துப் பயண அட்டை (எ.கா. ஈசி-லிங்க், NETS FlashPay அல்லது சலுகை அட்டை) வைத்திருக்கும் அனைவரும் இதற்குத் தகுதி பெறுகிறார்கள். NETS ரொக்க அட்டையில் மீட்டெடுக்க முடியாது. தவறுதலாக NETS ரொக்க அட்டையின் CAN ID சமர்ப்பிக்கப்பட்டால், எந்த விதத்திலும் பணம் திருப்பித் தரப்படாது.

பொதுப் போக்குவரத்துப் பயண அட்டைகள் அனைத்துக்கும் காலாவதித் தேதி இருப்பதைக் கவனத்தில் கொள்ளவும். உங்களது பொதுப் போக்குவரத்துப் பயண அட்டையின் காலாவதித் தேதியைத் தெரிந்துகொள்ள, அருகிலுள்ள SimplyGo பயணச்சீட்டு அலுவலகத்தில் அல்லது பெருவிரைவு ரயில் நிலையங்களில் / பேருந்து நிலையங்களில் அமைந்துள்ள சேவைக்கணினியில் அட்டையைத் தட்டவும்.

2. **எனது Healthpoints உடன் SimplyGo eVouchersகளை எப்படி மீட்டெடுப்பது?**
படிநிலை 1: உங்களது Healthy 365 செயலியைத் திறந்து, "Rewards" மீது அழுத்தவும்
**படிநிலை 2:** "Redeem now" மீது அழுத்தவும்
**படிநிலை 3:** பட்டியலிலிருந்து SimplyGo தேர்ந்தெடுக்கவும்
**படிநிலை 4:** "Redeem" மீது அழுத்திவிட்டு, திரையில் காட்டப்படும் அறிவுறுத்தல்களின்படி செய்யவும்
**படிநிலை 5:** மீட்டெடுப்பு வெற்றிகரமாக நிறைவடைந்ததும் திரையில் தகவல் தோன்றும். அதன்பின், நீங்கள் அருகிலுள்ள SimplyGo பயணச்சீட்டு அலுவலகத்திற்கு அல்லது பெருவிரைவு ரயில் நிலையங்களில் / பேருந்து நிலையங்களில் அமைந்துள்ள சேவைக்கணினிக்குச் சென்று, மீட்டெடுத்த பணமதிப்பை உங்கள் அட்டையில் நிரப்பிக்கொள்ளலாம். நீங்கள் SimplyGo செயலியை* அல்லது SimplyGo இணையவாசலைப்* பயன்படுத்தி உங்களது SimplyGo eVouchersகளை SimplyGo சலுகை அட்டையில் அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டையில் உடனடியாக மீட்டுக்கொள்ளலாம்.
** பயனர்கள் முதலில் SimplyGo கணக்குக்குப் பதிவு செய்து, SimplyGo சலுகை அட்டையை அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டையைக் கணக்கில் சேர்க்கவேண்டும்.*





3. **Healthpoints-ஐ SimplyGo eVouchersகளாக மாற்றுவதற்கான விகிதம் என்ன?**
ஒவ்வொரு 150 Healthpoints, $1 SimplyGo eVouchersக்குச் சமம்.

4. **SimplyGo eVouchersகளை மீட்டெடுக்க எனக்குக் குறைந்தபட்சம் எத்தனை Healthpoints தேவை?**
ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் குறைந்தது 150 Healthpoints தேவை.

5. **எனது SimplyGo eVoucherகளுடன் எனது பொதுப் போக்குவரத்து பயண அட்டையில் (எ.கா. ஈசி-லிங்க், NETS FlashPay அல்லது சலுகை அட்டை) எப்போது பணமதிப்பை நிரப்ப முடியும்?**
நீங்கள் Healthpoints புள்ளிகளை வெற்றிகரமாக மீட்டெடுத்த உடனே உங்களது SimplyGo eVoucherகளை மீட்டெடுக்கலாம். SimplyGo eVoucherகளை மீட்டெடுத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அதற்குரிய பொதுப் போக்குவரத்து பயண அட்டையில் பணமதிப்பை நிரப்பவேண்டும்.

நீங்கள் SimplyGo செயலி அல்லது SimplyGo இணையவாசல் வாயிலாகவும் உங்களது SimplyGo eVoucherகளின் நிலையைத் தெரிந்துகொள்ளலாம். மேல்விவரம் அறிய, https://simplygo.com.sg இணையத்தளத்திற்குச் சென்று "TransitLink" சின்னம் மீது அழுத்தவும்.





6. **எனது SimplyGo eVoucherகளுடன் எனது பொதுப் போக்குவரத்துப் பயண அட்டையில் (எ.கா. ஈசி-லிங்க், NETS FlashPay அல்லது சலுகை அட்டை) எங்கே பணமதிப்பை நிரப்ப முடியும்?**
நீங்கள் அருகிலுள்ள SimplyGo பயணச்சீட்டு அலுவலகத்திற்கு அல்லது பெருவிரைவு ரயில் நிலையங்களில் / பேருந்து நிலையங்களில் அமைந்துள்ள சேவைக்கணினிக்குச் சென்று, அல்லது SimplyGo செயலி* / SimplyGo இணையவாசல்* வாயிலாக உங்களது பொதுப் போக்குவரத்துப் பயண அட்டையில் பணமதிப்பை நிரப்பிக்கொள்ளலாம்.
** பயனர்கள் முதலில் SimplyGo கணக்குக்குப் பதிவு செய்து, SimplyGo சலுகை அட்டையை அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டையைக் கணக்கில் சேர்க்கவேண்டும்.*

சுய உதவி பயணச்சீட்டு இயந்திரம், நீங்கள் நிரப்பிய பணமதிப்பைச் சரியாகக் காட்டாவிட்டால், தயவுசெய்து மறுபடியும் முயற்சி செய்து பார்க்கவும் அல்லது SimplyGo பயணச்சீட்டு அலுவலகத்தை அணுகி உதவி பெறவும். அமைவிடங்களை SimplyGo இணையத்தளத்தில் காணலாம்: https://simplygo.com.sg > "TransitLink" சின்னம் மீது அழுத்தவும் > "Locations" மீது அழுத்தவும்.

**<u>பணம் நிரப்பும் சேவைக்கணினி / உதவிச்சேவை கணினி</u>**



**SimplyGo சேவைக்கணினி**





நீங்கள் SimplyGo செயலியை* / SimplyGo இணையவாசலைப்* பயன்படுத்தியும் உங்களது SimplyGo eVouchersகளை SimplyGo சலுகை அட்டையில் அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டையில் உடனடியாக மீட்டுக்கொள்ளலாம். SimplyGo சலுகை அட்டை அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டை பற்றிய மேல்விவரங்களுக்கு, செயலியில் / இணையவாசலில் SimplyGo சலுகை அட்டை குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதியைப் பார்க்கலாம் அல்லது https://www.simplygo.com.sg இணையத்தளத்தில் SimplyGo ஈசி-லிங்க் அட்டைகள் பகுதியைப் பார்க்கலாம்.

** பயனர்கள் முதலில் SimplyGo கணக்குக்குப் பதிவு செய்து, SimplyGo சலுகை அட்டையை அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டையைக் கணக்கில் சேர்க்கவேண்டும்.*

**SimplyGo கைப்பேசி செயலி (SimplyGo சலுகை அட்டை அல்லது SimplyGo ஈசி-லிங்க் அட்டைக்கு மட்டுமே)**

**படிநிலை 1:** செயலியைத் திறந்து 'eVouchers' மீது அழுத்தவும்.
**படிநிலை 2:** 'Redeem' மீது அழுத்தவும்
**படிநிலை 3:** 'Proceed' மீது அழுத்தவும்
**படிநிலை 4:** மீட்டெடுப்பு வெற்றிகரமாகப் பூர்த்தி அடைந்தவுடன் திரையில் தகவல் தோன்றும்.




- **சுய உதவி பயணச்சீட்டு இயந்திரம் எங்கே இருக்கிறது?**
  சுய உதவி பயணச்சீட்டு இயந்திரங்கள் (அதாவது, SimplyGo சேவைக்கணினிகள், பணம் நிரப்பும் சேவைக்கணினிகள் அல்லது உதவிச்சேவைக் கணினிகள்) நாடெங்கிலும் உள்ள பெருவிரைவு ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், ஒருங்கிணைந்த போக்குவரத்து நடுவங்கள் ஆகியவற்றில் அமைந்துள்ளன. மேல்விவரங்களுக்கு SimplyGo-வின் https://simplygo.com.sg இணையத்தளத்தில் "TransitLink" சின்னம் மீது அழுத்திவிட்டு, "Locations" மீது அழுத்தவும்.

- **SimplyGo eVouchersகளுக்குக் காலாவதித் தேதி இருக்கிறதா?**

உங்களது SimplyGo eVouchers, அவை மீட்டெடுக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் காலாவதியாகிவிடும். eVouchers காலாவதியான பிறகு பணமதிப்பைத் திரும்பப் பெற / பரிமாற்றம் செய்ய / வேறொருவருக்கு மாற்றித்தர முடியாது.


9. **எனது பொதுப் போக்குவரத்துப் பயண அட்டை (எ.கா. ஈசி-லிங்க், NETS FlashPay அல்லது சலுகை அட்டை) தொலைந்துவிட்டது / சேதமடைந்துவிட்டது. எனது SimplyGo eVouchersகளின் பணமதிப்பை நான் திரும்பப் பெற முடியுமா?**
நீங்கள் SimplyGo eVouchersகளின் பணமதிப்பை நிரப்புவதற்காகப் பதிவு செய்திருக்கும் அட்டை தொலைந்துவிட்டால் அல்லது சேதமடைந்துவிட்டால், HPB மற்றும் டிரான்சிட்லிங்க் நிறுவனத்தால் பணமதிப்பைத் திருப்பித் தர முடியாது.

10. **என்னிடம் காலாவதியான / செல்லுபடியாகாத / தவறாக இணைக்கப்பட்ட பொதுப் போக்குவரத்துப் பயண அட்டை (எ.கா. ஈசி-லிங்க், NETS FlashPay அல்லது சலுகை அட்டை) இருக்கிறது. நான் பணமதிப்பைத் திரும்பப் பெற முடியுமா அல்லது எனது SimplyGo eVouchersகளை வேறோர் அட்டைக்கு மாற்ற முடியுமா?**
காலாவதியான / செல்லுபடியாகாத / தவறாக இணைக்கப்பட்ட பொதுப் போக்குவரத்துப் பயண அட்டைக்கு மீட்டெடுக்கப்பட்ட SimplyGo eVouchersகளின் பணமதிப்பை சுகாதார மேம்பாட்டு வாரியம் மற்றும் டிரான்சிட்லிங்க் நிறுவனத்தால் திருப்பித் தரவோ அல்லது வேறோர் அட்டைக்கு மாற்றித் தரவோ முடியாது.

**உங்களது முயற்சியைப் பொதுப் போக்குவரத்து மின்பற்றுச்சீட்டுகளாக மாற்றி, போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்கான படிப்படியான நடைமுறையைத் தெரிந்து கொள்ளுங்கள்! Healthpoints புள்ளிகளுடன் Healthy 365 செயலியில் SimplyGo மின்பற்றுச்சீட்டுகளை மீட்டெடுக்க https://go.gov.sg/redeem-simplygo-evouchers-using-healthpoints கற்றுக் கொள்ளவும்.**

# 8. பங்குபெறும் பங்காளி வணிகர்கள்

1. HPB eVouchersகளை ஏற்கும் பங்குபெறும் பங்காளி வணிகர்களின் பட்டியலுக்கு, தயவுசெய்து Healthy 365 செயலியில் உள்ள வெகுமதிகள் பட்டியலுக்குச் சென்று HPB மின்பற்றுச்சீட்டின் மீது அழுத்தவும். HPB eVouchers விவரங்களின்கீழ் “View full list of participating merchants” இணைப்பு இருக்கும்.




2. HPB வெகுமதிகள் திட்டத்தில் பங்குபெறும் வணிகராகச் சேர விருப்பமா? மேல்விவரம் அறியவும், உங்கள் விருப்பத்தைச் சமர்ப்பிக்கவும் https://www.hpb.gov.sg/partners/partner-merchants இணையத்தளத்தை நாடவும்.

# 9. எங்களைத் தொடர்பு கொள்ளவும்

1. Healthpoints மற்றும் eVouchers வெகுமதிகள் பற்றிய கேள்விகளுக்கு, தொடர்பு கொள்ளவும்
   மின்னஞ்சல்: HPB_Mailbox@hpb.gov.sg
   ஹாட்லைன்*: 1800 223 1313

2. SimplyGo தொடர்பான கேள்விகளுக்கு, தொடர்பு கொள்ளவும்
   ஹாட்லைன்*: 1800 2255 663

   **1800 தொலைபேசி சேவைகளை கைப்பேசியிலிருந்து அழைக்கும்போது கட்டணம் விதிக்கப்படும்.*

Updated on 22 Sep 2025